தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தென்மேற்கு பருவமழை: தமிழகத்தில் வெயில் குறையும்

**சென்னை,**

கேரளத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கான சூழல் உருவாகி வருவதால் தமிழகத்தில் வெயிலின் தாக்கம் படிப்படியாகக் குறையும் என்று வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு மே 4-ஆம் தேதி கத்திரி வெயில் தொடங்கியது. முதலில் மழையுடன் தொடங்கிய கத்திரி வெயில், அதன் பிறகு நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வருகிறது. சென்னையில் பத்தாண்டுகளில் இல்லாத அளவு 110 டிகிரி வெயில் சுட்டெரித்தது.

மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் அனல் காற்றுடன் கூடிய வெப்பநிலை வாட்டி வருகிறது. சென்னை, மதுரை, கரூர் பரமத்தி, திருச்சி, பாளையங்கோட்டை, வேலூர் உள்பட 6 இடங்களில் திங்கள்கிழமை (மே 26) 100 டிகிரிக்கும் மேல் வெயில் பதிவானது. மாநிலத்தின் பிற இடங்களிலும் 95 டிகிரிக்கும் மேல் வெப்பநிலை இருந்தது.

இந்நிலையில் கேரளத்தில் அடுத்த வாரம் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுவதால், அடுத்து வரும் நாள்களில் தமிழகத்தில் வெயிலின் தாக்கம் குறையும் என்று கூறப்படுகிறது.

ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்கு பருவமழைக் காலமாகும். நாட்டின் 75 சதவீத மழைப் பொழிவு தென்மேற்கு பருவ மழைக் காலத்தை நம்பியே உள்ளது.

ஆண்டு தோறும் மே 20-ஆம் தேதியன்று அந்தமான் கடல் பகுதியில் தென் மேற்கு பருவ மழைக் காலம் தொடங்கும். ஆனால் இந்த ஆண்டு 2 நாள்களுக்கு

முன்பாகவே அதாவது மே 18-ஆம் தேதியன்றே பருவ மழை தொடங்கியதாக வானிலை மையம் தெரிவித்தது.

இதன் தொடர்ச்சியாக கேரளத்தில் ஜூன் 1-ஆம் தேதி முதல் பருவ மழை தொடங்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த சமயத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள தமிழகப் பகுதிகளிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இந்நிலையில் வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களில் செவ்வாய்க்கிழமை (மே 26) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## வைகை அணையில் சரிந்து வரும் நீர் மட்டம்

**ஆண்டிபட்டி,**

வைகை அணைக்கு திங்கள்கிழமை காலை முதல் நீர் வரத்து இல்லாததால் அணையின் நீர் மட்டம் படிப்படியாக குறைந்து வருகிறது.

வைகை அணைக்கு நீர் வரத்து இல்லாததால் நீர் மட்டம் 21 அடியாக சரிந்தது. இதனால் குடிநீர் திட்டங்களுக்கு கூட நீர் திறக்க முடியாத நிலை ஏற்படும் சூழல் உருவானது. இந்நிலையில் தேனி மாவட்டத்தில் பெய்த தொடர் மழை, மற்றும் பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் பெய்த பலத்த மழையால் வைகை அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் வைகை அணைக்கு நீர் வரத்து அதிகரித்து அணையின் நீர் மட்டம் 33 அடியை எட்டியது.

இந்நிலையில் கடந்த சில நாள்களாக முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டு 100 கன அடி தண்ணீர் மட்டுமே தற்போது திறந்துவிடப்பட்டுள்ளது. இதில் கம்பம் மற்றும் தேனி மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் திட்டங்களுக்கு தண்ணீர் எடுக்கப்படுகிறது. இதனால் வைகை அணைக்கு திங்கள்கிழமை காலை முதல் நீர் வரத்து இல்லை. இதனால் நீர் மட்டம் குறைந்து வருகிறது.

நீர் மட்டம்:

முல்லை பெரியாறு:

நீர் மட்டம்: 113.90 அடி(152), நீர் வரத்து:இல்லை, நீர் வெளியேற்றம்:100 கன அடி

வைகை அணை:

நீர் மட்டம்: 32.38 அடி(71), நீர் வரத்து:இல்லை, நீர் வெளியேற்றம்:40 கன அடி.

## விவசாய விரிவாக்க மையங்களில் ஆன்-லைன் பதிவு

**தேனி,**

தேனி மாவட்டத்தில் உள்ள விவசாய விரிவாக்க மையங்களில் விதை, உரம், பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் விவசாய உபகரணங்கள் இருப்பு விவரம் கணினி மூலம் ஆன்-லைனில் பதிவு செய்து பராமரிக்கப்பட உள்ளது.

இது குறித்து மாவட்ட விவசாயத் துறை அதிகாரிகள் கூறியது:

மாவட்டத்தில் கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், போடி, தேனி, பெரியகுளம், ஆண்டிபட்டி, கடமலை-மயிலை ஆகிய இடங்களில் உள்ள விவசாய விரிவாக்க மையங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. விவசாய விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்படும் விதை, உரம், பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவற்றின் விலை மற்றும் இருப்பு விபரங்களை கணினி மூலம் ஆன்-லைனில் பதிவு செய்து பராமரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன் மூலம் விவசாயிகள், மாவட்டத்துக்கு உள்பட்ட மற்றும் வெளி மாவட்டங்களில் உள்ள விவசாய விரிவாக்க மையங்களில் இருப்பு, விலை விவரத்தை ஆன்-லைன் மூலம் தெரிந்து கொண்டு, உரிய ஆவணம் மற்றும் சான்றிதழ்களை சமர்ப்பித்து தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம். இந்த நடைமுறை மாவட்டத்தில் வரும் ஜூன் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ளது என்றனர்.

## பருவமழை இடர்பாடு களைய முன்னெச்சரிக்கை நடவடிக்கை

**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையால் ஏற்படக் கூடிய இயற்கை இடர்பாடுகளில் இருந்து பொதுமக்கள், கால்நடைகளைக் காப்பாற்ற உரிய

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அலுவலர்களை ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர், தென்மேற்கு பருவமழையால் ஏற்படும் இயற்கை இடர்பாடுகளால் பொதுமக்கள், கால்நடைகள், விளைநிலங்கள் பாதிப்பு அடையாமல் இருக்க மழை நீர் உடனடியாக செல்வதற்கு ஏதுவாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் கிராமப்புற கால்வாய் மதகுகளின் அருகில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என மாநகராட்சி நிர்வாகம் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வருவாய்க் கோட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பள்ளமான இடங்களை கண்டறிந்து வெள்ளம் புகாமல் தடுக்க முன்னேற்பாடுகளை செய்ய வேண்டும்.

இயற்கை இடர்பாட்டில் பொதுமக்களுக்கு நோய் தாக்குதல் ஏற்பட்டால், உடனடியாக குணப்படுத்த தேவையான மருந்துகளை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். அனைத்து மருத்துவமனைகளிலும் ஆம்புலன்ஸ் வாகனங்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்.

இயற்கை இடர்பாட்டால் ஏற்படும் விளைநிலங்கள் பாதிப்பை சரியாக கணக்கிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## வேளாண்மைத் துறையில் விதை மணிலா விற்பனை

**போளூர்,**

சேத்துப்பட்டு வேளாண்மைத் துறையின் சார்பில் விதை மணிலா மற்றும் கோடைக்கால பயிறு வகை விதைகள் மானியத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

தமிழகத்தில் தற்போது கோடை மழை பெய்துள்ளது. இந்த மழையின் ஈரத்தை பயன்படுத்தி நிலத்தை உழுது தேவையான கால்நடை சாணம் (எருவு), உரம் இட்டு விவசாயிகள் மணிலா விதை விதைப்பது வழக்கம். இதேபோன்று சேத்துப்பட்டு ஒன்றியத்தில் உள்ள விவசாயிகள் இந்த வானம் பார்த்த பூமியை

உழுது மணிலா, உளுந்து, காரமணி, எள்ளு, கொள்ளு விதைப்பது வழக்கம். இந்த விவசாயிகளுக்கு கடந்த வருடம் சரிவர மழையில்லாததால் நிலத்தில் விதைத்த பொருள்களை எடுக்கமுடியாமல் விதைபயிறுக்கே கஷ்டப்பட்டனர். இதனால் வேளாண்மைத் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு மானியத்தில் விதை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சேத்துப்பட்டு ஒன்றியத்தில் சேத்துப்பட்டு, கொம்மனந்தல், வடமாதிமங்கலம் ஆகிய வேளாண்மை விரிவாக்க மையத்தில் விதை மணிலா மற்றும் கோடைக்கால பயிறு வகை விதைகள் மானியத்தில் விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் மானியத்தில் விதை பெற அந்தந்தப் பகுதி வேளாண்மை அலுவலகத்துக்குச் சென்று விதை பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை தெரிவித்தார். வேளாண்மை உதவி அலுவலர் அகிலாதேவி உடனிருந்தார்.

## கர்நாடகத்திலிருந்து 7 லட்சம் டன் மக்காச்சோளம் கொள்முதல்

**நாமக்கல்,**

தமிழகக் கோழிப் பண்ணைகளுக்கு குறைந்த விலைக்கு வழங்கிட, கர்நாடக மாநில உணவு, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து 7 லட்சம் டன் மக்காச்சோளம் கொள்முதல் செய்யப்பட உள்ளதாக தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் தீவன விலையேற்றத்தில் நாமக்கல் மண்டல கோழிப் பண்ணைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகின்றன. எனினும், கோழிப் பண்ணைத் தொழிலைத் தொடர்ந்து நடத்திட வெளி மாநிலங்களில் இருந்து தீவன மூலப் பொருள்கள் அதிகப்படியான விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. இதில், முக்கிய மூலப்பொருளான மக்காச்சோளம் ஒரு டன் சுமார் ரூ.14,800 என்ற விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதால், பொருளாதார ரீதியாக பண்ணையாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட வேண்டியுள்ளது.

தொடரும் இந்தப் பாதிப்புகளை அடுத்து, கர்நாடக மாநிலத்திலுள்ள உணவு, நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் இருப்பில் உள்ள சுமார் 7 லட்சம் டன் மக்காச் சோளத்தை தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் நேரடியாக

கொள்முதல் செய்து பண்ணையாளர்களுக்கு குறைந்த விலைக்கு விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் ஆர்.நல்லதம்பி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது: கோழித் தீவனத்துக்கு முக்கிய மூலப்பொருளாக உள்ள மக்காச்சோளத்தை இடைத்தரகர்கள் மொத்தமாக இருப்பு வைத்துக் கொள்வதால், கொள்முதல் சந்தையில் அவற்றின் விலை அதிகரித்து வருகிறது.

இதனால், பண்ணையாளர்கள் ஒரு டன் மக்காச்சோளத்தை ரூ.14,800 என்ற விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

இதைத் தவிர்க்க கர்நாடக மாநில உணவு, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலுள்ள சுமார் 7 லட்சம் டன் மக்காச்சோளத்தை வருகிற ஜூன் மாதம் 16ஆம் தேதி சங்கத்தின் மூலம் ஏலம் எடுத்து பண்ணையாளர்களுக்கு சந்தை விலையைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்திட திட்டமிட்டுள்ளது.

அவ்வாறு சங்கம் மக்காச்சோளத்தை கொள்முதல் செய்யும்பட்சத்தில் கோழிப் பண்ணையாளர்கள் அவரவர் தேவைக்கு ஏற்ப பெற்றுக் கொள்ளலாம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "விவசாயிகளுக்கும், வங்கிகளுக்கும் பாலமாக உழவர் மன்றங்கள் செயல்பட வேண்டும்

**'புதுக்கோட்டை,**

விவசாயிகளுக்கும், வங்கிகளுக்கும் பாலமாக உழவர் மன்றங்கள் செயல்பட வேண்டும் என்றார் நபார்டு வங்கியின் துணை பொது மேலாளர் எஸ். சோமசுந்தரம்.

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் அருகே செட்டிப்பட்டி, கண்ணங்குடி, சிவகாமிபுரம் ஆகிய கிராமங்களில் பெஸ்ட் தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பில் அண்மையில் நடந்த நபார்டு உழவர் மன்ற தொடக்க விழாவில் அவர் மேலும் பேசியது: எந்தக் காரணத்துக்காக கடன் பெறப்பட்டதோ அந்தக் காரியத்துக்கு கடனை முறையாகச் செலவு செய்ய வேண்டும். உழவர் மன்றங்கள்

மூன்றாண்டு காலத்துக்கு தொழில்நுட்பப் பயிற்சிக்கும், கல்விச்சுற்றுலா செல்லவும் நபார்டு வங்கி உதவி செய்யும்.

கிராமத்தின் பொதுத் தேவையை நிறைவேற்றவும், விவசாயம் வெற்றிகரமாக நடைபெறவும் உழவர் மன்றங்கள் துணை நிற்க வேண்டும். அப்போதுதான் அரசின் நோக்கம் முழுமை பெறும் என்றார்.இதைத் தொடர்ந்து, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணை பதிவாளர் கே.வி.எஸ். குமார் பங்கேற்று பேசியது: வங்கிகளின் சேவையை முறையாகவும், முழுமையாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கூட்டுச் செயல்பாடுகளால்தான் பல நன்மைகள் கிடைக்கும் என்றார்.

விழாவுக்கு கண்ணங்குடி ஊராட்சித் தலைவர் எஸ். கார்த்திகேயன் தலைமை வகித்தார். பெஸ்ட் நிறுவன இயக்குநர் டி. அதியமான், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கித் தலைவர் ஆர். முருகேசன், உழவர் மன்றக் கூட்டமைப்பின் துணைச் செயலர் ஏ. பழனிவேல் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

முன்னதாக, உழவர் மன்றத் தலைவர் சைவராசு வரவேற்றார். செட்டிப்பட்டி உழவர் மன்றத் தலைவர் மனோகர் நன்றி கூறினார்.

## கால்நடைத் தீவன விநியோகம்: மே 30 -க்குள் ஒப்பந்தம் எடுப்போர் விண்ணப்பிக்கலாம்

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புதுகை கால்நடை மருத்துவமனை மற்றும் கறம்பக்குடி கால்நடை மருந்தகம், இரண்டு இடங்களில் வறட்சி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தீவனம் (வைக்கோல் அல்லது சோளத்தட்டை) விநியோகம் செய்வதற்கு ஒப்பந்தம் எடுக்க விருப்பமுள்ளவர்கள், புதுக்கோட்டை, கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலக முகவரிக்கு வரும் 30.5.2014-ம் தேதி பிற்பகல் 3 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கலாம்.

மேலும், குறைந்த போட்டி விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் காப்பீடு தொகையாக 5 சதம் முன் பணம் வங்கி வரைவோலையாக அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். வங்கி வரைவோலை பெற்ற பின்னர் தீவனம் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்படும் என்ற தகவலை மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தெரிவித்துள்ளார்.

## சம்பா நெல் பயிர்க் காப்பீடு தொகையை விவசாயிகள் பெறலாம்

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த ஆண்டில் (2012-13) சம்பா நெல் பயிருக்கு காப்பீடு செய்த விவசாயிகளுக்கு ஏற்கெனவே முதல் தவணை(83.80 சதம்) வழங்கப்பட்டுள்ள நிலையில் தேசிய வேளாண் காப்பீடு நிறுவனத்திடமிருந்து தற்போது வரப்பெற்றுள்ள காப்பீடுத் தொகையை விவசாயிகள் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் கே.வி.எஸ். குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய வேளாண் காப்பீடு நிறுவனத்திடமிருந்து வர வேண்டிய (16.20 சதம்) பயிர்க் காப்பீடு இழப்பீடுத் தொகையில் கடந்த 24.2.2014 - அன்று (7.58 சதம்) ரூ. 1.33 கோடி, தற்போது (8.64 சதம்) ரூ. 1.57 கோடி உள்பட மொத்தம் ரூ. 2.85 கோடி தேசிய வேளாண் காப்பீடு நிறுவனத்திடமிருந்து வரப்பெற்று புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே, 2012-13 ஆம் ஆண்டில் சம்பா நெல் பயிர்க் காப்பீடு செய்து, பயிர் இழப்பீடுத் தொகையில் முதல் தவணை பெற்ற விவசாயிகள் 2-வது, 3-வது தவணை பயிர்க் காப்பீடு இழப்பீடுத் தொகையை ஏற்கெனவே தாங்கள் பெற்ற தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களின் பெற்றுக்கொள்ளலாம்.

இதில், ஏதேனும் இடர்பாடுகள் இருந்தால் புதுக்கோட்டை துணைப் பதிவாளரை 94436 44933, அறந்தாங்கி துணைப் பதிவாளரை 94421 45714, புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை 90477 53397 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்திற்கு 287.5மி.மீ மழை

**கோவை**: தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில் நீண்ட காலமாக பெய்து வந்த சராசரி மழையளவு 322.5 மி.மீ. கடந்த சில மாதங்களாக தமிழ்நாடு வேளாண் பல்கலை காலநிலை ஆராய்ச்சி மைய, ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வின் வாயிலாக இந்த ஆண்டு, தென்மேற்குப்பருவமழை காலத்தில், 287.5 மி.மீ மழை பெய்யும் என்று அறிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை காலத்தில், தமிழகம், மழை மறைவு மாநிலமாக உள்ளது. இருப்பினும், ஓராண்டில் பெறக்கூடிய மழை அளவில், 32 சதவீதம் தென்மேற்கு பருவமழை காலத்தில்தான் கிடைக்கிறது. இப்பருவமழை பெரும்பாலும் தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், அதிகளவு மழை பெய்யும். இந்த ஆண்டு பெய்யப்போகும் தென்மேற்குப் பருவமழை (ஜூன் மாதம் முதல் செப்டம்பர் வரை) மழை பற்றிய முன்னறிப்பு செய்வதற்காக, தமிழ்நாடு வேளாண் பல்கலையிலுள்ள, வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்துறை தலைவர் சத்தியமூர்த்தி தலைமையில் பல்கலை, ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். இதற்காக மார்ச், ஏப்ரல் மாதங்களில், பசிபிக் பெருங்கடலில், பூமத்திய ரேகையை ஒட்டிய கடற்பகுதியின் மேற்பரப்பு நீரின் வெப்பநிலை மற்றும் தென்மண்டல காற்றழுத்த குறியீடு, ஆகியவற்றை உபயோகித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆஸ்திரேலியாவிலிருந்து பெறப்பட்ட 'மழைமனிதன்' என்னும் கம்ப்யூட்டர் கட்டமைப்பும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டது. கடந்த ஆண்டு பெய்த மழையின் அளவு குறித்த புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டு இந்தாண்டு தென்மேற்குப் பருவமழையின் தீவிரம் எப்படி இருக்கும் என்பது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை காலத்தில், சராசரி மழையளவு (நீண்ட கால சராசரி மழை அளவில் 10 சதவீதத்திற்கும் குறைவாக அல்லது அதிகமாக) சென்னை, தர்மபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, மதுரை, சேலம், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. சராசரி மழையளவை ஒட்டிய மழை,(நீண்ட கால சராசரி மழை அளவை காட்டிலும் 10 முதல் 20 சதவீதத்திற்கும் குறைவான மழை) அரியலூர், கோவை, கடலூர், ஈரோடு, காஞ்சீபுரம், கன்னியாகுமரி, கரூர், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை. சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, திருநெல்வேலி, திருப்பூர், திருவாரூர், திருச்சி, தூத்துக்குடி, விழுப்புரம், விருதுநகரில் எதிர்பார்க்கலாம். சராசரி மழையளவை காட்டிலும் குறைவான மழை (நீண்ட கால சராசரி மழை அளவை காட்டிலும் 20 சதவீதத்திற்கும் குறைவான மழை) நாகப்பட்டினம், ராமநாதபுரம் மற்றும் தேனி மாவட்டங்களில் எதிர்பார்க்கப்படுகிறது என, வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

### 'விவசாயிகளே, விழிப்போடு இருங்கள்!':

'கடந்த ஆண்டை காட்டிலும், இந்தாண்டு, தென்மேற்கு பருவமழை, தமிழகத்தில் பரவலாக பெய்யும். மழைநீரை, விவசாயிகள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று, தமிழ்நாடு வேளாண் பல்கலை, காலநிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

கால நிலை ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது: வேளாண் பல்கலை, கடந்த ஆண்டு, தென்மேற்குப் பருவமழை குறித்து ஆய்வு மேற்கொண்டு, அறிக்கை வெளியிட்டது. அறிவிப்பை பின்பற்றிய விவசாயிகளும், மக்களும் பயனடைந்தனர்.

ஆராய்ச்சி மையம் அறிவித்ததை போன்று, கடந்தாண்டு, தென்மேற்கு பருவமழை ஜூனில் துவங்கியது. துவங்கிய சில நாட்கள் மட்டும் பெய்தது, நான்கு மாதங்கள் தொடர்ந்து பெய்ய வேண்டிய மழை, ஆகஸ்ட் மாதத்தில், 15 நாட்களுக்கு அடைமழையாக பெய்து தீர்த்தது. தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலுள்ள, நீர் பிடிப்புப் பகுதிகளான குளங்கள், அணைகள் நிரம்பின. ஆனால், விவசாயிகள் நீண்ட நாள் மழை பெய்யும் என்று நினைத்தனர்; அது, நடக்கவில்லை. இதற்கு காரணம், வானிலையில் ஏற்பட்ட திடீர் மாற்றமே. நாங்கள் ஆய்வு மேற்கொள்ளும் நாளுக்கும், மழை பெய்யும் நாளுக்கும் இடையில், சிறிய அளவிலான மாற்றங்கள்

நிகழும் வாய்ப்புள்ளது. அதனால்தான், உத்தேச மழை அறிவிப்பை வெளியிடுகிறோம். விளை நிலத்தில் பண்ணைக் குட்டைகள், கசிவுநீர் குட்டைகள் அமைப்பது, சிறுகுளம் அமைத்தல், வாய்க்கால் வெட்டி தண்ணீரை தேக்குதல் தொடர்பான குறிப்புகளை வழங்குகிறோம். நன்செய் நிலத்தில் கிணறு, போர், அல்லது ஆற்றுநீர் இருக்கும் பட்சத்தில், அதை தவிர்த்து மழை நீரை பயன்படுத்தும் முறை, புன்செய் நிலமாக இருக்கும் போது, மழை நீரை பயன்படுத்தும் முறை குறித்தும், வேளாண் தொழில் நுட்பத்தை எளிதில் வகையில், பல்கலை பேராசிரியர்கள் ஆலோசனை வழங்குகின்றனர். விவசாயிகள், மழைநீரை வீணாக்காமல் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு, காலநிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

## தென்மேற்கு பருவத்தில் தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு: அரசு எச்சரிக்கை

**திண்டுக்கல்** : தென்மேற்கு பருவகாலத்தில், தமிழகத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள கலெக்டர்களுக்கு, அரசு உத்தரவிட்டுள்ளது.

தென்மேற்கு பருவகாலம் ஜூனில் துவங்க உள்ளது. இந்த பருவத்தில், மாநிலத்தின் பல பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பொதுவாக தென்மேற்கு பருவமழை கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்குத்தான் அதிக பலனைத்தரும். தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிள்ள பகுதிகளில் மழை பெய்யும். பருவமழை, செப்., வரை நீடிக்கும். புயல், வெள்ளம் ஏற்பட்டால், நிவாரணப் பணிகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். கால்வாய்களை துார்வாரி மழைநீர் தங்கு தடையின்றி, செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். புயல், வெள்ளத்தை எதிர்கொள்ள, அனைத்து துறையினரும் 'அவசரகால திட்டம்' தயாரித்து வைத்திருக்க வேண்டும். வெள்ளம் பாதித்த பகுதிகளில் பயன்படுத்தும் வகையில், வயர்லெஸ் கருவிகளை தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். தீயணைப்புதுறையினர் ரப்பர் படகுகள், மிதவை படகுகள், ரப்பர் டிங்கிகள் ஆகியவற்றை போதுமான அளவில் வைத்திருக்க வேண்டும்.

அணைக்கட்டு பகுதியில் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தி, 24 மணி நேரமும் நீர்வரத்தை கண்காணிக்க வேண்டும். நீர்நிலை பகுதிகளில் உள்ள

ஆக்கிரமிப்புகளை முன்கூட்டியே அகற்றிவிட வேண்டும். மலைபகுதிகளில் நிலச்சரிவு, மரங்களால் ரோடுகள் துண்டிக்கப்பட்டவுடன் சரிசெய்ய மண் அள்ளும் இயந்திரங்களை நெடுஞ்சாலைத்துறையினர் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கிராம சபை கூட்டங்களை நடத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என, மாநில வருவாய் நிர்வாக ஆணையர் ஸ்ரீதர் உத்தரவிட்டுள்ளார்.

## சென்னையில் மழை பெய்ய வாய்ப்பு

**சென்னை** : கணினி சார்ந்த கணிப்புகள் வாயிலாக, சென்னையில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. சென்னையில், கடந்த சில தினங்களுக்கு முன், 43 டிகிரி செல்சியஸ் வெப்பம் கொளுத்தியது. அக்னி நட்சத்திரம் முடியும் தருவாயில், இது போன்ற வெப்ப நிலை உயர்வு சகஜம் தான் என்றாலும், பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர். ஆனால், தொடர்ந்து, வெப்பநிலை சற்றே குறைந்து வருகிறது. நேற்று முன்தினம், 41 டிகிரி என்றிருந்தது, நேற்று பகல், 38.1 டிகிரியாக குறைந்தது. அதே நேரம், கடந்த சில தினங்களாக வீசி வந்த அனல் காற்றின் தாக்கம் குறையவில்லை. வெப்பநிலை குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறுகையில், "கடற்காற்று அதிகரித்தால், காற்றில் ஈரப்பதம் அதிகரிக்கும். வெப்பநிலையும், காற்றின் ஈரப்பதமும் அதிகளவில் இருந்தால், சுற்றுப்புறத்தில் அனல் தாக்கம் அதிகமாக இருக்கும்," என்றார்.

இந்நிலையில், சென்னையில், மழைக்கு வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது. இதுகுறித்து, ரமணன் கூறுகையில், "கணினி சார்ந்த கணிப்புகள் அடிப்படையில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது. தமிழகத்தின் உள்மாவட்டங்களில் வெப்பச்சலனம் காரணமாக மழை பெய்தது. காஞ்சிபுரத்தில் மழை பெய்த நிலையில், சென்னையில் மழை பெய்யவில்லை," என்றார்.

இதற்கிடையில், வெப்பச்சலனம் காரணமாக நேற்று காலை நிலவரப்படி, திருவண்ணாமலை மாவட்டம், போளூர், 3; ஆரணி, 1 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. அடுத்த, 24 மணி நேரத்தில், தமிழகத்தில் ஆங்காங்கே மழை இருக்கும் எனவும், 48 மணி நேரத்தில், ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## மலிவுவிலை கடைகளில் 3,500 டன் காய்கறி விற்பனை

சென்னை மற்றும் கோவையில் இயங்கும், அரசு மலிவுவிலை கடைகளில், இதுவரை, 3,500 டன் காய்கறி விற்பனையாகி உள்ளது. தமிழகத்தில், வெளிச்சந்தையில், காய்கறி விலை கடுமையாக உயர்ந்தது. இதை கட்டுப்படுத்த, கடந்த ஆண்டு, ஜூலை மாதம், சென்னை மற்றும் புறநகரில், 31 பண்ணை பசுமை நுகர்வோர் காய்கறி கடைகள் திறக்கப்பட்டன. வெளிச்சந்தையுடன் ஒப்பிடும் போது, மலிவு விலை கடைகளில், குறைந்த விலை மற்றும் அதிக தரத்துடன் காய்கறி விற்பனை செய்யப்பட்டதால், பொது மக்களிடம் அமோக வரவேற்பு காணப்பட்டது. இதையடுத்து, கடைகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டதுடன், அரசு ஊழியர்களுக்காக, சென்னையில், இரண்டு நடமாடும் வாகனங்களிலும், காய்கறி விற்பனை துவக்கப்பட்டது. கடந்த ஆண்டு, ஜூலை முதல், நேற்று வரை, மலிவு விலை கடைகளில், 3,500 டன் காய்கறி விற்பனையாகி உள்ளது. இதன் மதிப்பு, 9.65 கோடி ரூபாய். இதுகுறித்து, உணவு மற்றும் கூட்டுறவு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: வெளிச்சந்தையில், காய்கறி விலை குறைவாக உள்ளதால், மலிவுவிலை கடைகளுக்கு, துவக்கத்தில் இருந்த ஆர்வம், தற்போது இல்லை.சென்னையில், 40; கோவையில், 10 கடைகள் இயங்கி வருகின்றன. விரைவில், அனைத்து மாவட்டங்களிலும், குறைந்த விலை காய்கறி திட்டத்தை விரிவுபடுத்த முடிவு செய்துள்ளோம். இவ்வாறு, அவர் கூறினார்.

## தீவிரம் ! : கோடை மழையால் உழவுப் பணி... : 75,000 ஏக்கரில் சாகுபடிக்கு வாய்ப்பு

**விருத்தாசலம்**: விருத்தாசலம் பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால், அதனைப் பயன்படுத்தி வயல்களில் உழவுப் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். விருத்தாசலம், கம்மாபுரம், சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம், சேத்தியாத்தோப்பு, குறிஞ்சிப்பாடி, பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோவில், கீரப்பாளையம், புவனகிரி பகுதிகளில் போர்வெல் பாசனம் மூலம் குறுவை நடவு பணி தீவிரமாக நடக்கிறது. கடந்த 4ம் தேதி முதல் அவ்வப்போது பரவலாக பெய்து வரும் தொடர் மழையால், கோடை வெயிலின் உஷ்ணம் ஓரளவு குறைந்து நெற்பயிர்கள் செழிப்பாக ளர்ந்துள்ளன. தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை ஈரப்பதத்தை பயன்படுத்தி விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் எள், உளுந்து,

மக்காச்சோளம், வேர்க்கடலை, பருத்தி பயிர்களை மானாவாரியாக சாகுபடி செய்வர்.

தற்போது தென் மேற்கு பருவமழை துவங்கும் முன், பரவலாக மழை பெய்து வருவதால் அதனைப் பயன்படுத்தி விவசாயிகள் வயல்களில் உழவுப் பணிகளை நம்பிக்கையுடன் துவங்கியுள்ளனர். வேளாண் அலுவலர் ஒருவர் கூறுகையில், "தற்போது பெய்து வரும் மழையால் கடலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள 42 ஆயிரத்து 500 ஏக்கர் குறுவை நெற்பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன. இதனால் மகசூல் அதிகரிக்கும். மேலும், ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்யப்படும் எள், உளுந்து, வேர்க்கடலை, பருத்தி, மக்காச்சோளம் பயிர்களை சாகுபடி செய்ய ஏதுவாக விவசாயிகள் நிலத்தை உழுது தயார் செய்து வருகின்றனர். மானாவாரியில் விதைக்க வம்பன் -3, வம்பன் -4 ரக உளுந்து விதை மட்டும் மானியத்தில் வழங்கப்படுகிறது. விவசாயிகள் விரும்பி சாகுபடி செய்யும் ஸ்ரீவில்லிபுத்தூர் -1, விருத்தாசலம் -1, விருத்தாசலம் -2, வம்பன் -1, வம்பன் -2, வம்பன் -3 உள்ளிட்ட ரகங்களுக்கும் மானியம் வழங்க அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்தாண்டு தென்மேற்கு பருவமழை துவங்கும் முன்பே மழை பெய்து வருவதால், கடந்தாண்டு மானாவாரியில் 65 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்த நிலையில் இந்தாண்டு சாகுபடி பரப்பளவு 75 ஆயிரம் ஏக்கராக அதிகரிக்க வாய்ப்புள்ளது' என்றார்.

## முருங்கை காய் விலை சர்ர்... விவசாயிகள் மகிழ்ச்சி

**கரூர்**: ஆவணி மாதத்தில், திருமண சீஸன் தொடங்கியுள்ள நிலையில் முருங்கைக்கு, திடீரென விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி, க.பரமத்தி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் முருங்கை சாகுபடி செய்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் பருவமழை பெய்தாலும் கூட, கடுமையான வறட்சிலும் விவசாயிகளுக்கு ஒரளவு வருமானம் கிடைத்தது. ஆனால், கடந்தாண்டு பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தால், முருங்கையின் தரம் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், முருங்கை காய்கள் நிறம் மாறியுள்ளதால், வெளி மாவட்டம், வெளி மாநிலங்களுக்கு அனுப்ப முடியவில்லை. இதனால், உள்ளூர் சந்தைகளில் முருங்கை காய்களை குறைந்த விலைக்கு கடந்த, இரண்டு மாதங்களாக விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

அரவக்குறிச்சி, க.பரமத்தி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நடந்த வாரச் சந்தையில் இருபது காய்கள் கொண்ட முருங்கை காய் ஒரு கட்டின் விலை, கடந்த சில மாதங்களுக்கு முன், 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால், கரூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## விதை நெல் தட்டுப்பாடு போக்க தயார் நிலையில் வேளாண் துறை

**சேலம்**: மழை இல்லாத சூழ்நிலையில், விதை நெல்லுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டை தவிர்க்க, வேளாண்துறை அதிகாரிகள், தயார் நிலையில் உள்ளனர்.

தமிழகத்தில், பருவமழை பொய்த்துப்போனது. இந்நிலையில், தற்போது பெய்த கோடை மழை, மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இருந்தபோதும், மழையளவு போதுமானதாக இல்லை என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். சேலம் மாவட்டத்தை பொறுத்தவரை, மே மாதத்தில் பெய்யக் கூடிய மழை அளவு, 210.4 மீட்டர் ஆகும். ஆனால், இந்தாண்டு மே மாதம், 133.7 மீட்டர் மழைதான் பெய்துள்ளது. சேலம் மாவட்டத்தை சுற்றியுள்ள, 20 வட்டார பகுதிகளிலும், ஜூன், ஜூலை மாதங்களில், நெல் பயிரிடப்படும். இதற்கு, ஆண்டிற்கு சராசரியாக, 400 டன் விதை நெல் தேவைப்படும். மே மாதத்தில் பெய்யக் கூடிய மழையின் அளவை பொறுத்து, விவசாயிகள் நெல் பயிரிடுவர். தற்போது, சேலம் மாவட்ட வேளாண்மை துறையின் சேமிப்புக் கிடங்கில், 477 டன் விதை நெல் உள்ளது. அதேபோல், சிறுதானிய வகைகளான, துவரை, உளுந்து, பாசிப்பயிறு, கொள்ளு மற்றும் தட்டைப்பயிறு ஆகிய விதை பயிர்கள், 127.3 டன் உள்ளது. பயிர் வகையில், நிலக்கடலை விதை, 72.5 டன் சேமிப்பில் உள்ளது. இந்த அளவு, தேவைப்படும் அளவை விட, அதிகமாக உள்ளது. வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தற்போதைய மழை அளவு குறைவாக உள்ளது. இந்நிலையில், வரும் காலத்தில், வறட்சியான சூழ்நிலை உருவாகும் பட்சத்தில், விதை பயிர்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டும். இந்நிலையை தவிர்கும் நோக்கில், தேவையான அளவை விட, உபரியாக விதை நெல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், விதை நெல் மட்டுமின்றி, சிறுதானியம் மற்றும் பயிர் வகைகளும், சேமித்து வைக்கப்பட்டுள்ளது.போதிய மழை இல்லாத காலத்தில், நெல் பயிரிடுவதை தவிர்த்து விட்டு, சிறுதானிய மற்றும் பயிர் வகைகள் பயிரிட

வலியுறுத்தப்பட்டு வருகிறது. மேலும், டெல்டா மாவட்டங்களுக்கும், விதை நெல், சேலத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு கூறினார்.

## வார சந்தைகளில் நிலக்கடலை விதை பருப்பு விற்பனை ஜோர்

**பனமரத்துப்பட்டி**: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் பெய்து வரும் மழையை தொடர்ந்து, மானாவாரி நிலக்கடலை பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவதால், விதை பருப்பு விற்பனை சூடு பிடித்துள்ளது.

பருவ மழையை நம்பி, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில், மானாவாரி நிலக்கடலை பயிரிடப்பட்டு, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் அறுவடை செய்யப்படும். தற்போது பரவலாக மழை பெய்து வருவதால், மானாவாரி நிலக்கடலை பயிர் செய்ய விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர்.

பனமரத்துப்பட்டி வட்டார விவசாயிகள், சுற்று வட்டாரத்தில் உள்ள வார சந்தைக்கு சென்று, நிலக்கடலை விதை பருப்பை விலைக்கு வாங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நேற்று, பனமரத்துப்பட்டி வார சந்தையில், நிலக்கடலை விதை பருப்பு குறைந்த அளவில் விற்பனைக்கு வந்தது. ஒரு படி விதை பருப்பு, 60 ரூபாய், ஒரு கிலோ, 80 ரூபாய் என, விற்பனை செய்யப்பட்டது.

இது குறித்து, விவசாயிகள் கூறியதாவது:

கடந்தாண்டு, மழை குறைவாக இருந்தாலும், நிலக்கடலை மகசூல் ஓரளவுக்கு நன்றாகவே இருந்தது. வெளியூர்களில், வியாபாரிகள் இயந்திரம் மூலம் நிலக்கடலை காய்களை உடைத்து, சுத்தம் செய்து, விதை பருப்பு விற்கின்றனர். அந்த விதை பருப்பு இயந்திரத்தில் அடிபட்டு, மேற்புறத்தில் உள்ள தோல் உரித்து காணப்படுவதால், விதை முளைப்பு திறன் குறைந்து இருக்கும்.

வார சந்தைகளில், விவசாயிகள் கையினால், நிலக்கடலை உரித்து, விதை பருப்புகளை விற்கின்றனர்.

இந்த விதை பருப்புகள் நல்ல முளைப்பு திறன் இருக்கும். எனவே, வார சந்தைகளில், விவசாயிகள் விற்பனை செய்யும் விதை பருப்புகளை வாங்கி சென்று, விதைக்க உள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விழுப்புரம் கமிட்டியில் நெல் வரத்து அதிகரிப்பு

**விழுப்புரம்**: விழுப்புரம் மார்க்கெட் கமிட்டிக்கு, நேற்று ஐந்தாயிரம் மூட்டை நெல் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது.

விழுப்புரம் மார்க்கெட் கமிட்டிக்கு, சுற்று வட்டாரப் பகுதிகளை சேர்ந்த ஏராளமான விவசாயிகள், நெல், மணிலா, எள், உளுந்து உள்ளிட்ட விளைபொருட்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று ஒரே நாளில், விழுப்புரம் மார்க்கெட் கமிட்டிக்கு, 5 ஆயிரம் நெல் மூட்டைகள் ஏலத்திற்கு வந்திருந்தன. இதில் டி.கே.எம் 9 ரக நெல் ஒரு மூட்டை அதிகபட்ச விலையாக 1,169 ரூபாய், குறைந்த விலையாக 1,156 ரூபாய் என கொள்முதல் செய்யப்பட்டது. சின்ன பொன்னி மூட்டை அதிகபட்சமாக 1,039 ரூபாய், ஏ.எஸ்.டி.16 ரக நெல் ஒரு மூட்டை 1,146 ரூபாய் என கொள் முதல் செய்யப்பட்டது. அதேபோன்று பஞ்சு ஒரு குவிண்டால் அதிகபட்ச விலையாக 5,301 ரூபாய், குறைந்த பட்ச விலையாக 4,599 ரூபாய் என கொள்முதல் செய்யப்பட்டது.

## மீன்பிடிக்க தடைக் காலம் முடிகிறது

**முருக்கேரி**: கடலில் மீன் பிடி தடைக்காலம் அடுத்த வாரத்துடன் முடிவதால் விலை குறையும் என மீன் பிரியர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழகத்தில் ஆண்டு தோறும் ஏப்., மாதம் 15ம் தேதியில் இருந்து மே மாதம் 31ம் தேதி வரை மீன் பிடிக்க தடை உள்ளது.

இது போன்ற காலங்களில் மீனவர்களுக்கு உதவித் தொகை அரசு வழங்குகிறது.

தடை காலங்களில் மரக்காணம் பகுதியில் உள்ள மீனவர்கள் கடலில் கட்டுமரம் கொண்டு பிடித்து வரும் மீன்களுக்கு அதிக கிராக்கி ஏற்படுகிறது.

முருக்கேரி, பிரம்மதேசம், நல்லாளம், மன்னார்சாமிகோவில், திண்டிவனம், செஞ்சி பகுதிகளில் உள்ள மீன் மார்க்கெட்டில் மீன் விலை உயர்ந்துள்ளது.

அடுத்த வாரம் தடைக்காலம் முடிவதால் வழக்கம் போல் அனைத்து மீன் மார்கெட்டிலும் மீன் வரத்து அதிகரிக்கும்.

இதனால் விலை குறையும் என மீன் பிரியர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## சாமந்தி பூ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

**மயிலம்**: மயிலம் பகுதி விவசாயிகள் சாமந்தி பூ சாகுபடி செய்ய மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். மயிலம் ஒன்றியம் கோபாலபுரம், வெளியனூர், விளங்கம்பாடி, தழுதாளி,மயிலம், முப்புளி, செண்டூர், வீடூர், தீவனூர் , வெளியனூர், தென்கொளப்பாக்கம் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் தற்போது அதிக அளவில் மலர் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். அதிக அளவு தண்ணீர் தேவையில்லை. கிணற்றில் தற்போதுள்ள குறைந்த நீரை கொண்டு பயிரிடலாம். சாமந்தி பூச்செடிகளை அதிகளவில் பூச்சிகள் தாக்குவதில்லை. இதனால் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு செலவு குறைகிறது. நிலத்தை நன்றாக உழவு செய்து, தொழுவுரம் இட்டு நன்றாக நிலத்தை சமன் செய்து பாத்திகள் கட்டி செடிகளை நடவு செய்கின்றனர். செடிகள் நடவு செய்த 22 நாட்களில் பூக்கள் பூக்க ஆரம்பிக்கிறது. விவசாயிகள் சாமந்திப் பூவை திண்டிவனம் பூ சந்தையில் தினசரி விற்கின்றனர். விழாக் காலங்களில் கிலோ 60 ரூபாய் வரை விற்கிறது. தற்போது நல்ல ரகமான பூ கிலோ 50 ரூபாய் முதல் விற்பனை செய்கின்றனர். இந்த மலர் செடிகளை பயிரிடும் விவசாயிகளுக்கு அரசு பயிர் கடன் வசதி, தொழில் நுட்பம், மான்ய உதவிகளை செய்தால் மேலும் அதிகளவில் மலர் சாகுபடி செய்ய முடியும்.

## தீவன புல் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்

**மரக்காணம்**: கால்நடைகளுக்கு தேவையான தீவனப்புல்லை சாகுபடி செய்து தினமும் வருமானம் ஈட்டி வருகின்றனர்.

மரக்காணம் பகுதியில் பருவ மழை பொய்த்து போனதால் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களுக்கு தட்டுப்பாடு உள்ளது . மூன்று போக சாகுபடி இருந்தால் மட்டுமே கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கும்.

இதனால் கால்நடை தீவன பற்றாக்குறை ஏற்பட்டது. இதனை சமாளிக்க மரக்காணம் பகுதியில் கந்தாடு, ஆலப்பாக்கம், கீழ்பேட்டை, அனுமந்தை, காளியாங் குப்பம், நடுக்குப்பம் கிராமங்களில் கோ 3, கோ 4 ரக தீவனப்புல்லை 25 சென்ட் வீதம் விவசாயிகள் நிலத்தில் பயிரிட்டுள்ளனர்.

புல் விற்பனையில் தினம் நூறு ரூபாய் வீதம் கிடைக் கிறது.

இதனால் இந்த பகுதியில் தீவன புல் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

## மீன் விற்பனை "ஜோர்': வியாபாரிகள் மகிழ்ச்சி

**கம்மாபுரம்**: கம்மாபுரம் பகுதியில் மீன்கள் விற்பனை அதிகரிப்பால் வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கம்மாபுரம் பகுதியில் கோ.பொன்னரி, அரகுழி, கம்மாபுரம், ஊ.மங்கலம், காவனூர், வி.குமாரமங்கலம் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள ஏரி, குளங்களில் மீன் பிடிப்பு துவங்கியுள்ளது.

கிராம பகுதிகளில் மீன் பிடிப்பதால் வெளியிலிருந்து வரும் மீன்களை விட விலை குறைந்து காணப்படுகிறது. மீன் வியாபாரி ஏழுமலை கூறுகையில், "கிராம ஏரிகள், குளங்களில் மீன்பிடி துவங்கியுள்ளதால் மீன்கள் விலை குறைந்துள்ளது.

கெண்டை மீன் கிலோ 100 ரூபாய்க்கும், சிலேப்பி 40, போட்டாக் 120, சிசி 120, விரால் 400 ரூபாய்க்கும் விற்பனை செய்கிறோம்.

நகரை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. மீன்களை இங்கேயே வெட்டி, சுத்தம் செய்து தருவதால் மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்' என்றார்.

## கோடை மழையால் மேய்ச்சல் நிலத்தில் பசுந்தீவனம் : கூடுதலான ஒரு லட்சம் லிட்டர் பால் உற்பத்தி

**நாமக்கல்**: "கோடை மழையால் வறண்டு கிடந்த மேய்ச்சல் நிலங்கள், பசுந்தீவன மேய்ச்சல் நிலமாக மாறி வருவதால், தமிழகத்தில், தினசரி பால் உற்பத்தியில், ஒரு லட்சம் லிட்டர் கூடுதலாக பெருகி உள்ளது' என, பால் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் உள்ள, 17 மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியங்களில் இருந்து, ஒரு நாளைக்கு, 1.82 கோடி லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், ஐந்து லட்சம் குடும்பம், கூட்டுறவு சங்கம் மூலமாக, ஆவினுக்கு பாலை சப்ளை செய்கின்றன.

கோடை வெப்பத்தின் காரணமாக, பால் உற்பத்தி வெகுவாக சரிந்திருந்தது. அதனால், பொதுமக்களுக்கு வினியோகம் செய்வதில், தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில், தற்போது வெப்ப சலனம் காரணமாக, கடந்த, 4ம் தேதி அக்னி நட்சத்திரம் தொடங்கியதில் இருந்து, தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்துள்ளது. இதனால், கோடை வறட்சியாக கிடக்கும் மேய்ச்சல் நிலங்களில், கால்நடைகள் உண்ணக்கூடிய புல், கீரை, செடி, கொடிகள் முளைத்துள்ளன. கோடையில் பால் உற்பத்தி குறையும் நிலையில், கடந்த, சில நாட்களாக பால் உற்பத்தி அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க பொதுச்செயலாளர் ராஜேந்திரன் கூறியதாவது:

தமிழகம் முழுவதும், கோடை வெப்பத்தை தணிக்கும் விதமாக, வெப்ப சலன மழை பெய்து வருவதால், ஒட்டுமொத்த பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. காய்ந்து கிடக்கும் மேய்ச்சல் நிலங்கள், பசுந்தீவன மேய்ச்சலாக மாறியுள்ளது. ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியிலும், 5,000 முதல், 20,000 லிட்டர் வரை அதிகரித்துள்ளது.

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள, 1,298 கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாக, நாளொன்றுக்கு, 4.05 லட்சம் லிட்டர் வரை பால் உற்பத்தி செய்யப்படும். ஆனால், சில நாட்களாக, கூடுதலாக, 20,000 லிட்டர் வீதம், 4.25 லட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. மாநிலம் முழுதும் கணக்கிட்டால், ஒரு நாளைக்கு மொத்த உற்பத்தியில், ஒரு லட்சம் லிட்டர் வரை, கூடுதல் பால் உற்பத்தி பெருகி உள்ளது. அதனால், பால் தட்டுபாடு குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## வான்கோழி வளர்ப்பில் அதிக லாபம் பல்கலை துணை வேந்தர் அழைப்பு

**புதுக்கோட்டை**: வான்கோழி வளர்ப்பில், அதிக கவனம் செலுத்துமாறு, கால்நடை பல்கலை துணைவேந்தர் ஹரிகிருஷ்ணன் அறிவுரை வழங்கினார்.

புதுக்கோட்டையில் கால்நடைத்துறை மண்டல ஆராய்ச்சி மைய பலகலையின் வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு நடந்த விழாவில் துணைவேந்தர் பேசியதாவது:

நாட்டு மக்கள் தொகையில், 70 சதவீதம் பேர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பருவமழை தவறுவதாலும், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகளாலும் விவசாயம் கேள்விக்குறியாகி வருகிறது.

இதனால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யவும், நீடித்த நிலையான வருவாயை பெறவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும் வேளாண்மையுடன் இணைந்த உபதொழிகளில் கவனம் செலுத்துவது அவசியமாகிறது.

ஆடு, மாடு, கோழி, மீன், முயல், பட்டுப்புழு, காளான் போன்றவற்றை வளர்ப்பதன் மூலம் அதிக வருவாய் கிடைக்கிறது.

வான்கோழி வளர்ப்பு லாபகரமான தொழிலாக மாறி வருகிறது. வான்கோழி இறைச்சி மற்றும் முட்டையின் தேவை, நாளுக்கு நாள் அதிகரித்துவருவதால், இவற்றை வளர்ப்பதன் மூலம் அதிக லாபத்துடன், நிரந்தர வருவாய் கிடைக்கும்.

சிறு, குறு விவசாயிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் வான்கோழி வளர்ப்பில் ஈடுபடலாம்.

வான்கோழி வளர்க்க முன்வருபவர்களுக்கு, கால்நடைத்துறை மருத்துவ அறிவியல் பல்கலையின் சார்பில், செயல்விளக்க பயிற்சி வழங்குவதோடு, கையேடுகளும் வழங்கப்படுகிறது.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுவினர் உபதொழிலாக வான்கோழி வளர்ப்பில் அதிக கவனம் செலுத்தி, வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில், வான்கோழி வளர்ப்பு குறித்து பயிற்சி முடித்த, 25 பேருக்கு, வான்கோழி குஞ்சுகள், தீவன புல் விதைகள் மற்றும் உப்பு கரைசல் இலவசமாக வழங்கப்பட்டது.

கால்நடைத்துறை மருத்துவ அறிவியல் பல்கலை இயக்குனர் பாபு, உதவி இயக்குனர் டேனியல் ராஜ், வேளாண் இணை இயக்குனர் ஷாஜஹான் உட்பட கால்நடைத்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

## ஆண்டிபட்டியில் மழை

**ஆண்டிபட்டி** : ஆண்டிபட்டி பகுதியில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு பெய்த மழையால் வெயிலின் தாக்கம் குறைந்திருந்தது.

கடந்த இரண்டு நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகம் இருந்தது. நேற்று மாலை 5 மணிக்கு, பலத்த காற்றுடன் மழை பெய்தது.

பலத்த மழை ஒரு மணி நேரம் நீடித்ததால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டது. பலத்த மழை பெய்தாலும் கண்மாய்களுக்கு நீர் வரத்து ஏற்படவில்லை.

கோடை உழவு செய்த நிலங்களுக்கு பலன் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## மானியத்தில் கடலை விதை

**சிங்கம்புணரி** : சிங்கம்புணரி ஒன்றிய விவசாயிகளுக்கு மானிய விலையில் கடலை விதை வேளாண்மை துறை வழங்குகிறது.

இப்பகுதியில் தற்போது, மானாவாரியில் கடலை,பயறு வகைகள் பயிர் செய்ய தேவையான மழைபெய்துள்ளது.

விவசாயிகள் கோடை உழவுவை துவக்கியுள்ளனர்.சாகுபடிக்கு தேவையான கடலை விதை டி.எம்.வி.7 .பயிருக்குத் தேவையான உயிர் உரம்,ரைசோபியம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

விவசாயிகள்சிங்கம்புணரியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகுமாறு தெரிவித்துள்ளனர்.

## திருப்புவனத்தில் மழை

**திருப்புவனம்** : திருப்புவனத்தில் நேற்று மாலை 5 மணி முதல் 7 மணி வரை மழை பெய்தது.

திருப்புவனம் வட்டாரத்தில் கடந்த சில நாட்களாவே வெயில் வாட்டி வதைத்தது. பகலில் வெளியே செல்ல முடியாமல் மக்கள் தவித்தனர். திடீரென்று நேற்று மாலை 5 மணியில் இருந்து இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

பலத்த காற்று வீசியதால் சாலையோரம் இருந்த சில மரங்கள் சாய்ந்தன. மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது.

சிவகங்கையிலும் சிறிது நேரம் மழை பெய்தது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>**



**மேட்டூர்**: மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளதால் நீர்மட்டம் 36.95 அடியாக உயர்ந்துள்ளது.

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு கடந்த 10 நாட்களாக 2 ஆயிரம் கனஅடிக்கும் அதிகமாக உள்ளது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 2272 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 501 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

அப்போது, அணையின் நீர்மட்டம் 36.95 அடி. நீர் இருப்பு 10.57 டி.எம்.சி.

## சவுதியில் மாம்பழ திருவிழா



**துபாய்:** சவுதி அரேபியாவில் மாம்பழ திருவிழா ஒரு வாரமாக நடக்கிறது இது நாளையுடன் முடிவடைகிறது. இதில் கர்நாடகாவில் உள்ள மாண்டியா மாவட்டத்தில் இருந்து அனுப்பப்பட்ட மாம்பழங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து திருவிழா ஏற்பாடு செய்த அமைப்பின் மேலாளர் அல்-முல்ஹிம் கூறுகையில், மாம்பழம் உற்பத்தியாகும் அனைத்து நாடுகளில் இருந்தும் மாம்பழங் களை இறக்குமதி செய்து கண்காட்சிக்கு வைத்துள்ளோம் என்றார்.

## ஏற்றுமதி ரக தேயிலை விலை அதிகரிப்பு



**கோவை:** கோவை தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டின் 21வது வாரத்திற்கான ஏலத்திற்கு உள்ளூர் ரகம் (டஸ்ட்) 2.70 லட்சம் கிலோ விற்பனைக்கு

வந்தது. இதில் 1.99 லட்சம் கிலோ விற்பனையானது. 74 சதவீதம் விற்பனையாகியுள்ளது. சராசரியாக விற்பனை கிலோ ரூ.91.34 விற்பனையானது. மொத்தம் ரூ.1.82 கோடிக்கு வர்த்தகம் நடந்தது. ஏற்றுமதி ரகமான லீப் 96 ஆயிரம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 84 ஆயிரம் கிலோ விற்பனையானது. இதில் 88 சதவீத தேயிலை விற்பனையானது. இந்த தேயிலை சராசரியாக கிலோ ஒன்று ரூ.81.29க்கு விலை போனது. கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் ஏற்றுமதி ரகம் விலை ரூ.1.13 அதிகரித்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் இந்தவாரம் ரூ.2.51 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.7 லட்சம் அதிகமாகும். கடந்த பல வாரங்களுக்கு பிறகு ஏற்றுமதி ரகத்திற்கு கூடுதல் விலை கிடைத்துள்ளது. தேயிலை விற்பனை அளவும் அதிகரித்துள்ளது.

**நுகர்வு குறைந்ததால் கறிக்கோழி விலை தொடர்ந்து சரிவு**



**கோவை:** கோவை, திருப்பூர் மாவட்டத்தில் கறிக்கோழி உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் மற்றும் கேரளாவிற்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. உற்பத்தியாளர்கள் கறிக்கோழி விலையை தினசரி நிர்ணயித்து வருகின்றனர். அதன்படி, பண்ணை மொத்த கொள்முதல் விலை, சில்லரை விற்பனையில் உயிருடன் சில்லரை விலை, தோலுடன் கறி விலை, தோல் நீக்கிய கறி விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்து வருகின்றனர். கறிக்கோழி கடந்த 11ம் தேதி மொத்த கொள்முதல் விலை உயிருடன் கிலோ ரூ.81 ஆகவும் சில்லரை விற்பனையில் தோலுடன் கறி ரூ.150 ஆகவும், தோல் நீக்கிய கறி ரூ.160ஆகவும்

நிர்ணயித்தனர். இதற்கிடையே கோடை வெயில் காரணமாக கறிக்கோழி நுகர்வு குறைய துவங்கியது. இதனால் கறிக்கோழி விலை சரிய துவங்கியது. கடந்த 15ம் தேதி மொத்த கொள்முதல் விலை உயிருடன் கிலோ ரூ.79 ஆகவும், சில்லரை விற்பனையில் தோலுடன் கறி ரூ.145 ஆகவும், தோல் நீக்கிய கறி ரூ.155 ஆகவும் குறைந்தது. படிப்படியாக விலை சரிந்தது.

நேற்று மொத்த கொள்முதல் விலை உயிருடன் கிலோ ரூ.62 ஆகவும், சில்லரை விற்பனையில் தோலுடன் கறி கிலோ ரூ.115க்கும், தோல் நீக்கிய கறி கிலோ ரூ.125க்கும் சரிந்தது. இது குறித்து உற்பத்தியாளர்கள் கூறுகையில், கறிக்கோழி விலை தொடர்ந்து சரிந்து வருவதற்கு காரணம் தமிழகத்தில் நிலவும் கடும் கோடை காரணமாக நுகர்வு குறைந்துள்ளது என்றனர்.

## இதுவரை ரூ.10 கோடிக்கு வர்த்தகம்

**இமாம் பசந்த், பங்கனப்பள்ளி சீசன் 20 நாளில் முடிகிறது**



**சேலம்:** சேலம் மார்க்கெட்டில் நடப்பு ஆண்டில் மாம்பழ சீசன் அடுத்த 20 நாளில் முடிவுக்கு வரவுள்ளது. இந்தாண்டில் இதுவரை ரூ.10 கோடிக்கு மேல் வர்த்தகம் நடந்திருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர். சேலம் மாவட்டத்தில் மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, தர்மபுரி மாவட்டத்தில் காரிமங்கலம், பாலக்கோடு, அரூர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர், காவேரிப்பட்டணம், பகுதிகளில் நடுசாலை, சேலம் பெங்களூரா, இமாம்பசந்த், பங்கனப்பள்ளி, குதாதத், மல்கோவா, அல்போன்சா, செந்தூரா உள்பட பல்வேறு ரக மாம்பழங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கும்

விற்பனைக்கு செல்கிறது. இந்தாண்டு வரத்து குறைவாகவே இருந்தது. இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், Ôதமிழகத்தில் ஏப்ரல் - ஜூன் மாம்பழ சீசன். இதன் உச்சமாக மே 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை வரத்து அதிகமாக இருக்கும். ஆனால் கடந்தாண்டை ஒப்பிடுகையில் மாம்பழம் வரத்து குறைந்துள்ளது. மல்கோவா, சேலம் பெங்களூரா, இமாம்பசந்த், நடுசாலை, செந்தூரா, பங்கனப்பள்ளி, குதாதத் உள்ளிட்ட உயர் ரக மாம்பழங்கள் சீசன் இன்னும் 20 நாட்களில் முடிவடைகிறது. அதன் பின் மாம்பழத்தின் கடைசி ரகமான நீல மாம்பழம் சீசன் இன்னும் ஒன்றரை மாதம் வரை நீடிக்கும்.

சேலம் மார்கெட்டுக்கு சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து தினசரி 10 முதல் 15 டன் மாம்பழங்கள் விற்பனைக்கு வருகிறது. கடந்தாண்டு மே மாதத்தில் தினசரி 25 முதல் 30 டன் வந்தது. நடப்பாண்டு வரத்து பாதியாக குறைந்து விட்டது. கடந்தாண்டு மாம்பழம் விற்பனை மூலம் மே மாதத்தில் ரூ.15 கோடிக்கு விற்பனை நடந்தது. ஆனால் நடப்பாண்டில் இந்த விற்பனை ரூ.10 கோடியாக குறைந்து விட்டது. நடப்பாண்டு மா விளைச்சல் இல்லாததால் மா விவசாயிகளுக்கும், மாம்பழம் வரத்து இல்லாததால் வியாபாரிகளுக்கு ரூ.5 கோடிக்கு மேல் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது என்றனர்.

## விளைச்சல் பாதிப்பால் புதினா விலை அதிகரிப்பு



**சேலம்**: தமிழகத்தில் தர்மபுரி, சேலம், கள்ளக்குறிச்சி, ஈரோடு, நாமக்கல், கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் அதிக அளவில் புதினா சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் கடந்த பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் புதினா அமோக விளைச்சலை தந்தது. விவசாயிகள் எதிர்பார்த்ததை போலவே, நடப்பாண்டு

அனைத்து பகுதிகளிலும் புதினா அமோக விளைச்சல் இருந்தது. இதனால் கடந்த மூன்று மாதமாக புதினா கட்டு விலை சரிந்து காணப்பட்டது. தற்போது வரத்து குறைந்ததால், புதினா கட்டு விலை உயர்ந்து வருகிறது. இது குறித்து சேலம் கடைவீதி வியாபாரிகள் கூறுகையில், கடந்த ஒரு மாதமாக சேலம் மார்க்கெட்டுக்கு புதினா வரத்து குறைந்துள்ளது. அதனால் விலை படிப்படியாக அதிகரித்து வருகிறது. கடந்த மாதம் வரை ஒரு கட்டு புதினா ரூ.5 முதல் ரூ.6 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு கட்டு ரூ.10 முதல் ரூ.12 வரை விற்கப்படுகிறது' என்றார்.

## முட்டை ஏற்றுமதி பாதிப்பை தடுக்க நாமக்கல்லை தனி மண்டலமாக பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

**நாமக்கல்**, : முட்டை ஏற்றுமதி பாதிப்பு குறித்த பிரச்னைகளை தடுக்க, நாமக்கல்லை தனி மண்டலமாக பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நாமக்கல் எம்பி சுந்தரம் உறுதியளித்துள்ளார்.

நாமக்கல் எம்பி சுந்தரத்தை, தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி, துணைத்தலைவர் மணி, சங்க நிர்வாகிகள் கணபதி, லோகநாதன், சுந்தர்ராஜ் ஆகியோர் நேரில் சந்தித்து தேர்தல் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தனர். அதை தொடர்ந்து, கோழிப்பண்ணை தொழில் மேம்பாட்டிற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்த கோரிக்கை மனுவை அளித்தனர். அதில் கூறியிருப்பதாவது: மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய உணவு கழகத்தில், மனிதர்கள் பயன்படுத்த முடியாத கோதுமை, அரிசி உள்ளிட்ட தானியங்களை மானிய விலையில் கோழிப்பண்ணையாளர்களுக்கு அளிக்க வழி செய்ய வேண்டும். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும், சத்துணவு திட்டத்தில் முட்டையை வழங்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

பிற மாநிலங்களில் பறவை காய்ச்சல் ஏற்பட்டால் கூட வெளிநாடுகள் உடனடியாக இந்திய முட்டை இறக்குமதிக்கு தடை விதிக்கின்றன. இதனால் நாமக்கல் பண்ணையாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.

வெளிநாடுகளுக்கு இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் மொத்த முட்டையில் 90 சதவீதம் நாமக்கல்லில் இருந்து தான் அனுப்பப்படுகிறது. எனவே, நாமக்கல்லை

தனி மண்டலமாக மத்திய அரசு பிரித்து, அறிவித்தால் ஏற்றுமதி பாதிக்காது. இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. மனுவை பெற்றுக்கொண்டபின், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அறிவுரையை பெற்று, இந்த கோரிக்கை மீது உரிய நடவடிக்கை எடுக்க நாடாளுமன்றத்தில் குரல்கொடுப்பேன் என எம்பி சுந்தரம் கோழிப்பண்ணையாளர்களிடம் உறுதி அளித்தார்.

## ரோஜா செடிகள் விற்பனை அமோகம்

**நாமக்கல்**, : தர்மபுரி மாரண்டஹள்ளி பகுதிகளில் விளைவிக்கப்படும் பல வண்ண ரோஜா செடிகளின் விற்பனை நாமக்கல்லில் களை கட்டத் துவங்கியுள்ளது. ஓசூர், தர்மபுரி உள்பட பல பகுதிகளில் சிகப்பு, ஆரஞ்ச், மஞ்சள், ரோஸ் உள்பட பல்வேறு வண்ணங்களில் பூக்கும் ரோஜா செடிகள் விளைவிக்கப்பட்டு வெவ்வேறு மாவட்டங்கள், பிற மாநிலங்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன.

கோடை கால விடுமுறை முடிந்து அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகள் திறக்கப்பட உள்ள நிலையில், நகரின் பல்வேறு பகுதிகளில் ரோஜா செடிகளின் விற்பனை அதிகரித்துள்ளது.

நாமக்கல் தெற்கு அரசு ஆண்கள் பள்ளி அருகே மோகனூர் ரோடு சாலை ஓரத்தில் ரோஜா செடிகள், மல்லிகைச் செடிகள், கொய்யா மரக்கன்றுகள் விற்பனைக்காக குவிந்துள்ளன. இதை, பொது மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். இது குறித்து பூச்செடிகள் வியாபாரி மகபூப் பாஷா கூறுகையில், கோடை காலங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் பூச்செடிகள் மற்றும் மரக்கன்றுகளின் விற்பனை குறைந்து காணப்படும்.

மழைக்காலம் தொடங்குவதாலும், பள்ளி கல்லூரிகள் திறக்கும் நாட்கள் என்பதாலும் மாணவிகள், பெற்றோர் பூச்செடிகளை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். .

தொட்டியுடன் கூடிய பூச்செடிகள் ரூ.100க்கும், கவரில் வைக்கப்பட்டுள்ள பூச்செடிகள் ரூ.30க்கும் விற்பனை செய்கிறோம் என்றார்.

## <u>வேளாண் அலுவலகங்களில் பயறு விதைகள் விற்பனைக்கு தயார்</u>

**நாமகிரிப்பேட்டை,** : கோடை பயறு சாகுபடி செய்ய, வேளாண் அலுவலகங்களில் விதைகள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது என விதை சான்று அலுவலர் தகவல் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த வாரம் கோடை மழை பரவலாக பெய்தது. இதையடுத்து கோடை பயிறு சாகுபடி குறித்து வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து விதைசான்று உதவி இயக்குனர் மணிக்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

உணவு தானிய பயிர்களில் நெல், சிறுதானிய பயிர்களையடுத்து, பயறு வகை சாகுபடி மிக அவசியம். பயறு வகைளை சாகுபடி செய்ய நடப்பு பருவம் ஏற்புடையதாக உள்ளது.

நடப்பு பருவத்தில் சாகுபடி செய்யத் தேவையான பாசிப்பயறு சான்று விதைகள் மற்றும் ஆதார விதைகள் போதிய அளவில் கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து அரசு வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பாசிப்பயறு ரகங்களில் கோ6, கோ7, வம்பன் ரகங்கள் நடவு பருவத்திற்கு ஏற்றவை. எனவே, விவசாயிகள் தங்கள் தேவைக்கு அரசு வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி இதனை வாங்கிக்கொள்ளலாம்.

விதைகளை வாங்கும்போது உரிய விற்பனை பட்டியலை விவசாயிகள் கேட்டுப் பெறவேண்டும். சான்று விதைகள் மற்றும் ஆதார விதைகளை கொண்டு, தங்கள் வட்டார வேளாண் உதவி இயக்குநரின் வழிகாட்டுதலின் பேரில், விதைப்பண்ணைகளை அமைத்து பதிவு செய்து கொள்ள லாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>விவசாயிகள் குறைதீர் கூட்டம் 30ம் தேதி நடக்கிறது</u>

**கிருஷ்ணகிரி**, : கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 30ம் தேதி நடக்கிறது.

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வரும் 30ம் தேதி காலை

11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை வகிக்கிறார். இந்த கூட்டத்தில் விவசாயிகள் தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்துகொள்ளலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>கோடை காலத்தில் கொட்டுகிறது மழை வேளாண் செழிக்கும்விவசாயிகள் நம்பிக்கை</u>**

**கரூர்,**: இந்த ஆண்டு மே மாதத்தில் பெ ய்து வரும் மழை நம்பிக்கை தரும் வகையில் அமைந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை 652.20 மிமீ ஆகும். இதில், குளிர்காலம், கோடைகாலங்களில் பெய்யும் மழை யுடன், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை கா லத்தில் பெய்யும் மழை யையும் சேர்த்து ஆண்டு சராசரி மழை கணக்கிடப்படுகிறது.

இதில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலத்தில்தான் அதிகளவு மழை பெய்து வருகிறது. 2013ம் ஆண்டு ஜனவரியில் 0.08மி மீ, பிப்ரவரி 27.06 மிமீ, மார்ச் 4.01 மிமீ, ஏப்ரல் 18.71 மிமீ, மே 46.99 மிமீ என மழை பெய்தது. அடுத்து வந்த தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையும் எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதன் கார ணமாக, கரூர் மாவட்டத் தில் ஆறு, குளங்கள் வற ண்டு, நிலத்தடி நீர் மட் டமும் குறைந்தது, இதனால் கடந்த சில மாதங்களாக கடுமையான குடிநீர் பஞ் சம் ஏற்பட்டது.

இதன்பின் இந்தாண்டு ஏப்ரல் வரை குறிப்பிடத்தகுந்த அளவில் மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் கோடை உழவு உள்ளிட்ட பல்வேறு விவ சதாய பணிகளை தொடங்க முடியாமல் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில், விவசாயிகளுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் இம்மாதம் 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை கன்னியாகுமரி அருகே ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தொ டர்ந்து 3 நாட்கள் 371.90,மி.மீ 411.30 மி.மீ மற்றும் 32.80 மி.மீ மழை பொழிந்து மகிழ்ச்சியளித்தது.

இந்நிலையில், நேற்று இரவு 10மணி முதல் 12மணி வரை இரண்டு மணி நேரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக இடி மின்னலுடன் மழை பெய் தது.

அதன்படி, மாயனூரில் 68, பஞ்சப்பட்டி 14, கிருஷ்ணராயபுரம் 70, குளித்தலை 15.40, தோகைமலை 25.30, மயிலம்பட்டியில் 7.40மி மீட்டர் என மழை அளவு பதிவானது. மே மாதம் துவக்கம் மற்றும் இறுதிப் பகுதியில் நம்பிக்கை அளிக் கும் வகையில் மழை பொழி ந்துள்ளதால் இந்த ஆண்டு பருவ மழையும் போதிய அளவு பெய்து விவசாயம் செழிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

## மழையை பயன்படுத்தி அரியலூர் மாவட்டத்தில் கோடை உழவுபணி தீவிரம்

**அரியலூர்**, : அரிய லூர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த மழையை பயன்படுத்தி கோடை உழவுப்பணி தீவிரமடைந்துள்ளது.

தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் துவங்குவதற்கு முன்னதாகவே கோடை வெயில் பொதுமக்களை வாட்டி எடுத்தது. இதன் காரணமாக கடும் வெப்பத்தால் ஏரி, குளங்களில் நீர் நிலைகள் வற்றிய நிலையில் இருந்தது.

மேலும் விவசாய நிலங்கள் வறண்டு காணப்பட்டது. இதைத்தொடர்ந்து வெப்பத்தை தணிக்கும் வகையில் கடந்த 4ம்தேதி முதல் சில தினங்களாக மழை பெய்தது. அரியலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளான திருமானூர் ஒன்றியத்தில் காமரசவல்லி, ஏலாக்குறிச்சி, தூத்தூர், திருமழப்பாடி, குலமாணிக்கம், கண்டிராதித்தம், கீழ்காவட்டான்குறிச்சி, திருமானூர், செம்பியக்குடி ஆகிய பகுதிகளிலும், தா.பழூர் ஒன்றியத்தில் கடம்பூர், முட்டுவாஞ்சரி, கோவிந்தப்புத்தூர், அரங்கோட்டை, அணைக்குடி, ஸ்ரீபுரந்தான், அருள்மொழி, மதனத்தூர், வாழைக்குறிச்சி, அடிக்காமலை, குடிகாடு, தென்கச்சி, அண்ணகாரன்பேட்டை, கோடாலிகருப்பூர் ஆகிய பகுதிகளில் தோட்டக்கலை பயிர்களான நிலக்கடலை, செடிமுருங்கை, மக்காச்சோளம், கத்திரி, கரும்பு, மிளகாய், எள் மற்றும் சம்பா நெற் பயிர்களும் பயிரிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கோடை உழவு பணி மேற்கொள்வதற்கு தயார் நிலையில் இருந்த விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் கடந்த சில நாட்களாக போதிய மழை பெய்து. இந்நிலையில் பயிரிட்ட நிலங்களை டிராக்டர் மூலமும், கால்நடைகள் மூலமும் உழவு பணியை தீவிரப்படுத்தி உள்ளனர்.

கோடை உழவு செய்வதன் மூலம் நிலத்திலுள்ள களைச்செடிகள் முற்றிலும் அழிக்கப்படும்.

மேலும் நிலத்தை உழுதும்போது மண்ணின் அடிப்பாகத்திலிருந்து தேவையற்ற புழுக்கள் வெளியில் வரும். அப்போது அந்த புழுக்கள் வெப்பத்தில் மயங்கிய நிலையில் இருக்கும்போது பறவைகள் அதை கொத்தி தின்னும். இதனால் மண்ணின் தரம் நன்கு பதப்படுத்தப்பட்டு விவசாயத்திற்கு ஏற்ப தயார் நிலைக்கு வந்துவிடும் என்பதால் முன்கூட்டியே உழவுப்பணியை அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் தொடங்கி உள்ளனர். இதுதவிர அரியலூர், செந்துறை, ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளிலும் உழவுப்பணியை விவசாயிகள் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

## <u>உழவர் மன்றம் துவக்க விழா</u>

**புதுக்கோட்டை**, : புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார்கோவில் ஒன்றியம் செட்டிப்பட்டி, கண்ணங்குடி, சிவகாமிபுரம் ஆகிய கிராமங்களில் நபார்டு வங்கி உதவியுடன் பெஸ்ட் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் உழவர் மன்றங்களின் துவக்க விழா நடைபெற்றது.

இதில் நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் சோமசுந்தரம் உழவர் மன்ற பெயர் பலகைகளை திறந்து வைத்து பேசினார்.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வங்கி இணைப்பதிவாளர் குமார் வங்கிகளின் சேவைகள் குறித்து விளக்கி பேசினார். கண்ணங்குடி ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திகேயன், பெஸ்ட் தொண்டு நிறுவன இயக்குனர் அதியமான், செட்டிப் பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் தலை வர் முருகேசன், உழவர் மன்ற கூட்டமைப்பின் துணை செயலாளர் பழனி வேல் ஆகியோர் உழவர் மன்றங்களை வாழ்த்தி பேசி னர்.

முன்னதாக கண்ணங்குடி உழவர் மன்ற தலைவர் சைவராசு வரவேற்றார். செட்டிப்பட்டி உழவர்மன்ற தலைவர் மனோகர் நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அந்தியூர் ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.22 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை



**அந்தியூர்**,

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.22 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டது.

தேங்காய்

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு அந்தியூர், எண்ணமங்கலம், அத்தாணி, வெள்ளித்திருப்பூர், ஒலகடம் மற்றும் கர்நாடக மாநிலம் ராமாபுரம், வேலாம்பட்டி ஆகிய பகுதிகளில் இருந்து வந்த விவசாயிகள் விவசாய விளைபொருட்களை கொண்டுவந்து இருந்தனர். தேங்காய் 50 ஆயிரம் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் சிறிய தேங்காய் ஒன்று 6 ரூபாய் 50 காசுக்கும், பெரிய தேங்காய் ஒன்று 16 ரூபாய்க்கும் ஆக மொத்தம் ரூ.5 லட்சத்துக்கு ஏலம் போனது.

கொப்பரை தேங்காய்

கொப்பரை தேங்காய் 200 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 8 ஆயிரத்து 815 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 10 ஆயிரத்து 419 ரூபாய்க்கும் ஆக மொத்தம் ரூ.15 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது. மக்காச்சோளம் 20 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.1,337-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,377-க்கும் ஆக மொத்தம் ரூ.26 ஆயிரத்துக்கு ஏலம் விடப்பட்டது.

ரூ.22 லட்சத்துக்கு விற்பனை

நிலக்கடலை (காய்ந்தது) 400 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரத்து 19 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 800 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது. இந்த ஏலத்தில் மொத்தம் 21 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய்க்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டது. நாமக்கல், சேலம், திருப்பூர், மேட்டுப்பாளையம், விருதுநகர் ஆகிய பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் விவசாய விளைபொருட்களை ஏலம் எடுத்து சென்றனர்.

## <u>சோலையார் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>



சோலையார் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் நிரம்பி காணப்படுவதை படத்தில் காணலாம்.

**வால்பாறை,**

வால்பாறை பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் சோலையார் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

வால்பாறையில் மழை

வால்பாறை பகுதியில் கடந்த ஒரு மாதமாக கடுமை யான வறட்சி நிலவியது. இதனால் பி.ஏ.பி. திட்டத்தின் அடிப்படை அணைகளான சோலையார், நீரார், சின்னக் கல்லார் ஆகிய அணைகளுக்கு தண்ணீர் வரத்து குறைந்தது.

இதன் காரணமாக சோலை யார் அணையில் இருந்து பரம் பிக்குளம் அணைக்கு தண்ணீர் திறந்து விடுவதும், மின் உற்பத் தியும் பாதித்தது. 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையார் அணையின் நீர் மட்டம் 2 அடியாக குறைந் தது.

இந்த நிலையில் இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்தே தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. வால் பாறை பகுதியில் மே மாதம் எந்த ஆண்டும் இல்லாத அள விற்கு இந்த ஆண்டு மழை தொடர்ந்து பெய்து வரு கிறது.

சோலையார் அணை

பலத்த மழையால் சோலை யார் அணையின் நீர்மட்டம் கிடு,கிடுவென உயர்ந்து வரு கிறது. சோலையார் அணைக்கு விநாடிக்கு 89.58 கனஅடியும், சின்னக்கல்லாரில் இருந்து 70.98 கனஅடியும், நீரார் அணை யிலிருந்து 26 கன அடி யும் தண்ணீர் வந்து கொண் டிருக்கிறது.

இதனால் அணை யின் நீர்மட்டம் உயர்ந்து 17.66 அடியாக உயர்ந்துள்ளது.

அடுத்த மாதம் (ஜூன்) 1-ந்தேதி தமிழகத்தில் தென் மேற்கு பருவமழை பெய்ய தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள் ளது.

தண்ணீர் வரத்து அதி கரித்து உள்ள நிலையில் தென் மேற்கு பருவ மழையும் பெய்ய தொடங்கினால் சோலை யார் அணை கடந்த ஆண்டை போன்று அதன் முழு கொள் ளளவை எட்டி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**<u>வேளாண்மைத்துறை அதிகாரிகளுக்கான ஆலோசனை கூட்டம்</u>**



**இலுப்பூர்,**

அன்னவாசல் வட்டார வேளாண்மை துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை – அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டம் 2014–15–ன் ஆண்டின் கீழ், விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி யுக்திகள் வட்டாரம் அளவிலான செயல் திட்டங்கள் தீட்டுதல் தொடர் பான கூட்டம், அன்னவாசல் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடை பெற்றது.

இக்கூட்டத்திற்கு அன்னவாசல் வேளாண்மை உதவி இயக்குனர் சிங்காரம் தலைமை தாங்கி பேசினார். கூட்டத்தில், சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தேவையான செயல் திட்டங்களை இனம், துறை வாரியாக மாநில அளவில் மாநிலத்திற்குள்ளான மற்றும் மாவட்ட அளவில் பயிற்சிகள், கற்றறிவு பயணங்கள், துறை சார்ந்த செயல் விளக்கங்கள், வட்டார அளவில் குழுக்கள் அமைத்தல், பண்ணை பள்ளி நடத்துதல் போன்ற செயல் திட்டங்கள் பற்றி துறைகள் சார்ந்த அலுவலர்கள் முன்னிலையில் ஆலோசனைகள் பெறப்பட்டு, செயல் திட்டங்கள் தீட்டப் பட்டன. முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரவிராஜன் வரவேற்று பேசி னார். இக்கூட்டத்திற்கான ஏற் பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் மற்றும் வட்டார தொழில்நுட்ப அலு வலர்கள் செய்திருந்தனர். இக் கூட்டத்தில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலை துறை, விதை சான்றளிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, வனத் துறை ஆகிய துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.